**செய்தி வெளியீடு எண்: 457** **நாள்: 16.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.7.2018) தலைமைச் செயலகத்தில், திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் – பொன்னமராவதி ஆகிய இடங்களில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு சார் கருவூல அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

நிர்வாக வசதிக்காகவும், அரசுக்கு ஏற்படும் தொடர் வாடகை செலவினத்தைத் தவிர்க்கவும், தற்போது மின் ஆளுமை (e-Governance) திட்டங்களான தானியங்கி பட்டியல் ஏற்புமுறை (ATBPS) மற்றும் மின் ஓய்வூதியம் (e-Pension) போன்ற திட்டங்களை செம்மையாக செயல்படுத்திடவும், விலைமதிப்புமிக்க முத்திரைத் தாட்கள் மற்றும் சேம பாதுகாப்பு பொருட்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், ஓய்வூதியதாரர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கவும், மாற்றுத்திறனாளிகளுக்கான தனி சாய்தளம் அமைக்கவும், வாடகை கட்டடங்களில் இயங்கும் சார்கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 6 ஆண்டுகளில் 55 சார் கருவூல அலுவலகக் கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மேலும் 21 சார் கருவூல அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம் – ஆவடியில் 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம் – பொன்னமராவதியில் 67 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள சார் கருவூல அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.பா. பெஞ்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டு துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கருவூல கணக்குத் துறையின் முதன்மைச் செயலாளர் / ஆணையர் திரு. தென்காசி சு. ஜவஹர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.7.2018**